**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 22-08-2023**

**வேலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-08-22 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-08-23 | 2023-08-24 | 2023-08-25 | 2023-08-26 | 2023-08-27 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 4.0 | 2.0 | 0.0 | 0.0 | 7.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 38.0 | 38.0 | 37.0 | 38.0 | 37.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 27.0 | 26.0 | 26.0 | 27.0 | 26.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 70 | 70 | 70 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 30 | 40 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8 | 10 | 8 | 8 | 10 |
| காற்றின் திசை (கோணம்) | 250 | 250 | 230 | 250 | 270 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 6 | 7 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

ஆகஸ்ட் 23,24,27தேதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 37 முதல் 38 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 முதல் 27 டிகிரி செல்சியஸ் ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 முதல் 80 விழுக்காடாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 30 முதல் 40 விழுக்காடாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகமானது மணிக்கு 8 முதல் 10 கி.மீ வரை தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை பொறுத்த வரையில் ஆகஸ்ட் 27 முதல் செப்டம்பர் 2, 2023 வரை இயல்பான மழை மற்றும் வெப்பநிலை காணப்பட வாய்ப்புள்ளது. தற்பொழுது நிலவும் சூழ்நிலை காரணமாக பயிர்களில் பூச்சி/ நோய் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே வயலை அவ்வப்பொழுது கண்காணித்து பூச்சியின் தாக்கம் தென்பட்டால் அதற்கேற்ப பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| வரும் நாட்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் பூச்சி மற்றும் பூஞ்சாணகொல்லியுடன் ஒட்டும் திரவம் கலந்து தெளிக்கவும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | நெற்பயிரில் இலைமடக்கு புழுவின் தாக்கம் தென்படுகிறது. தாக்கத்தின் அறிகுறியாக இலைகள் நீளவாக்கில் மடிக்கப்பட்டிருக்கும், புழுக்கள் இலைகளின் பச்சை நிற திசுக்களை சுரண்டுவதால் இலைகள் வெண்மையாக மாறி காய்ந்துவிடும். தீவிர தாக்குதலின்போது முழு நெல் வயலும் வெண்மையான நிறத்தில் காய்ந்தது போல் காட்சியளிக்கும். இதனை கட்டுப்படுத்த பைபிரினில் 80% WG 20-25 கி/ஏக்கர் அல்லது வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவிகிதம் அல்லது வேப்பெண்ணைய் 0.03 சதவிகிதம் என்ற அளவில் தெளிக்க வேண்டும். நெல் பூட்டை பருவத்தில் பருவத்தில் T N A U நெல் ரீப் 3 கிலோ முறையே 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து தேவையான ஒட்டும் திரவம் சேர்த்து 10 நாட்கள் இடைவெளியில் ஒரு ஏக்கருக்கு தெளிக்க வேண்டும். இதனால் நெற்கதிரில் ஏற்படும் மலட்டுத்தன்மையை குறையும், மணி பிடிக்கும் திறன் அதிகரிக்கும், வறட்சி மற்றும் உயர் வெப்பத்தை தாங்கும் திறன் அதிகரிக்கும். |
| நிலக்கடலை | நிலக்கடலையில் பூவை தக்க வைக்கவும், நெற்று நிரப்பவும் மற்றும் வறட்சியை தாங்கும் தன்மையை அதிகரிக்கவும் விதைத்த 35 ம் நாள் ( 50 % பூக்கும் சமயத்தில்) மற்றும் 45ம் நாள் ( காய் முற்றும் பருவம் ) இரண்டு தெளிப்பாக நிலக்கடலை ரிச் ஏக்கருக்கு 2 கிலோ (ஒவ்வொரு தெளிப்பிற்கும் ) வீதம் தெளிக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | தென்னையில் சிவப்பு கூன் வண்டின் தாக்கத்தை கட்டுப்படுத்த வேப்பங்கொட்டைத் தூளையும், மணலையும் 1:2 என்ற விகிதத்தில் கலந்து, மரம் ஒன்றிற்கு 150 கி வீதம் நடுக்குருத்தின் 3 மட்டை இடுக்குகளில் வைக்க வேண்டும். காண்டாமிருக வண்டினை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 2 ரைனோ லூர் இனக்கவர்ச்சிபொறிகளை அமைக்க வேண்டும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கறவை பசுக்களில் அஜீரணம் கோளாறு ஏற்பட்டால் ஹிமாலயன் பட்டிசா என்ற மூலிகை மருந்து பொடியை சிறிது நீரில் கலந்து 50 கிராம் அளவுக்கு ஒரு நாளைக்கு ஒரு முறை |

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | வீதம் இரண்டு நாட்களுக்கு வாய் வழியே கொடுத்தால் ஜீரணம் சரியாகி நன்கு தீவனம் எடுத்து கொள்ளும். |
| வெள்ளாடு | ஆடுகள் அரிசி, சோறு, மாவு, கஞ்சி தானியங்கள் போன்றவற்றை அதிகம் உண்டால் வயிற்று உப்புசம் ஏற்படும். அப்போது ப்ளோட்டோசில் என்ற மருந்தை காலையில் 10 மி.லி மாலையில் 10மி.லி வீதம் வாய் வழியே கொடுத்தால் வயிற்று உப்புசம் சரியாகும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | கோழிப் பண்ணைகளில் கோழி குஞ்சுகள் வாங்குவதற்கு 5 நாட்களுக்கு முன்பு புகைமூட்டம் செய்ய வேண்டும். தூய்மை செய்த கோழிப்பண்ணையினுள் கூளபொருட்கள் தண்ணீர், தீவன டப்பாக்கள் வைத்த பின்னர் சுற்றுப்புற படுதாவை உயர்த்தி கட்ட வேண்டும். உட்புற தரைப்பகுதிக்கு 100 சதுர அடி இடத்திற்கு ஒன்று வீதம் உலோக சட்டி அல்லது மண் தட்டுகளை வைத்து அதில் 200 மி.லி பார்மலின் எடுத்துக்கொண்டு ஒவ்வொன்றிலும் 100 கிராம் ப்ளீச்சிங் பவுடரை கொட்ட வேண்டும். இவ்வாறு செய்வதால் புகைமூட்டம் ஏற்படும். இதை மூன்று நாட்களுக்குப் பின்பு எடுத்துவிட்டு ஐந்தாம் நாளில் கோழிக்குஞ்சுகளை விடலாம். இதன் மூலம் நச்சுயிரிகள் அளிக்கப்பட்டு நோய் ஏற்படும் வாய்ப்புகள் தடுக்கப்படுகிறது. |